1973 மார்ச் 30]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அந்த விவரத்தை உறுப்பினரே தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்கப் படும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பொது மக்கள் அதைப் பயன்படுத்தவே முடியாது. அது, தொழிலாளர்களில் இன்ஷூரன்ஸ் செய்து கொண்டவர்களுக்கு மட்டும்தான். அங்கே அனுமதிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட, அதிகமான எண்ணிக்கைகொண்ட படுக்கைகள் இருப்பதாக, ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் கருதுவதால், சில படுக்கைகளைப் பயன்படுத்த அனுமதிக்கவில்லை. எல்லாப் படுக்கைகளையும் பயன்படுத்த அனுமதி தரவேண்டுமென்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனைக் கேட்டிருக்கிறார்கள். அந்த அனுமதி கிடைத்தால் மற்றப் படுக்கை களும் பயன்படுத்தப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஒரு தவறான கருத்தை டாக்டர் தருவதனால்தான் சொல்கிறேன். அங்கே படுக்கைகளுக்கு ஆள் வருவதில்லையென்று கூறுகிறார்கள். அதுசரியல்ல, அங்கே படுக்கைகள் போதாது என்ற குறைதான் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அங்கே ஏறத்தாழ 550 அல்லது 600 படுக்கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கே ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனால் அனுமதிக்கப்பட்டிருக்கிற படுக்கைகள் ஏறத்தாழ 400 அல்லது 420. ஆகவே, மேலும் ஏறத்தாழ 100 அல்லது 120 படுக்கைகளைப் பயன்படுத்த ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் அனுமதிக்காத காரணத்தால், அவை பயன் படுத்த முடியாத கட்டத்தில் இருக்கின்றன.

பீடித் தொழிலுக்கு வருங்கால வைப்பு நிதித் திட்டம்

* 576 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களுக்கு Provident Fund Insurance திட்டம் கொண்டுவரும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) : தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தைப் பீடித் தொழிலுக்கு விரிவுபடுத்தலாமென்னும் மத்திய அரசின் செயற் குறிப்பிற்குத் தமிழ் நாடு அரசு தன் இசைவைத் தந்துள்ளது. இது குறித்து மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தைப் பீடித் தொழிலுக்கும் விரிவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை.

Water supply for Avinashi and adjoining taluks

* 577 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal at present to let Kundah tail-end to feed the tanks and ponds in Avinashi and nearby taluks; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, 60 வருடத்திற்கு முன்பாக, குந்தா கடைமடைப் பகுதி நீரை உபயோகப்படுத்தி, வறட்சியான பகுதியாகிய பல்லடம், அவினசி, ஈரோடு தாலுகாக்களிலுள்ள குளங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் எஸ்டிமேட்ஸ்கூட ரூ. 8 கோடிக்குப் போடப்பட்டதே, அதுபற்றி மறுபரிசிலனை செய்ய சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குந்தா கடைமடைப் பகுதியிலிருந்த தண்ணீரைக்கொண்டு பாசன வசதித் திட்டம் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், குந்தா நீர் மின்சக்தித் திட்டம், பவானி ஏற்பாட்டால் ஏற்பட்டிருக்கிற சிக்கல்கள், கோயம்புத்தூர் குடிநீர் வழங்கு திட்டத் தேவைகள், கேரள மாநிலம் அட்டப்பாடி பள்ளத்தாக்கில் பாசன வசதி ஆகிய கூடுதல் பொறுப்புகளைக் கருத்திலேகொண்டு, தலைமைப் பொறியாளர் இந்தத் திட்டத்தை எச்சரிக்கையுடன் செயல்படுத்த வேண்டுமென்ற குறிப்பின்பேரில் தற்பொழுது இந்தக் கருத்து